

# பரலோக பொக்கிஷங்கள்

மேலானவைகளையே நாடுங்கள்! (கொலோசெயர் 3:2)

## இந்த நாளிலும், களிகூருங்கள்!

உண்மைதான் 'இன்று' கர்த்தர் உண்டுபண்ணின நாளில் களிகூர்ந்திருப்பதே மகத்துவமான ஜீவியம்! ஆகிலும், 'இன்றோ' நான் தள்ளப்பட்டு, புறக்கணிக்கப்பட்ட நாளாயிருக்கிறதே, இதையும் கர்த்தர் உண்டுபண்ணின நாள் என எப்படி களிகூர்ந்திட முடியும்? கேளுங்கள் இரகசியத்தை.... "இந்த புறக்கணிக்கப்பட்ட கல்லை, கர்த்தர் தன் கரத்தால் எடுத்து, அது உங்கள் குடும்பமானாலும் அல்லது கர்த்தருடைய வீடாகிய சபையானாலும், உங்களை கட்டப்படுவதற்கு முக்கிய "மூலைக்கல்லாக" உங்களை மாற்றும் அதிசயம் காண்பீர்கள்! விசுவாசத் துடன், இந்த நாளில் களிகூருங்கள்! இது கர்த்தரால் மாத்திரமே உண்டாகும் செயல்! (சங்கீதம்.118:22-24).

*-tr*


பெட்டகம் 40 | ஜூலை | பரல்கள் 7

2024




## சத்தியம் முழங்கும் தாசர்களுக்கே, தீங்கு உண்டு!

இன்றைய சராசரி ஊழியம் "மனுஷர் உதவிக்கு" கரம் நீட்டிவிட்டு...... ஆவிக்குரிய ஊழியத்தில் ஒருவர் மனதும் புண்படாதபடி பார்த்துக்கொள்ளுகிறதே! நீயோ, தேவ ஊழியனே, ஒவ்வொரு உள்ளங்களையும் அதிரச் செய்வாயாக!...... 'இன்றும்' சிலரை ஆத்திரமான மூர்க்கம் அடைந்திடச் செய்வதற்கும் தயங்காதிருப்பாயாக!

இன்றைய பெரும்பாலான பிரசங்கிகள், திரள் கூட்டத்தை 'மனம் நோகாமல்' கரம் கோர்த்து முன் செல்கிறார்கள்! நீயோ, தேவ ஊழியனே, அந்த திரள்கூட்டத்தை சவாலிட எதிர்த்து முழங்குவாயாக! முழு சுயாதீனத்தோடு, தீக்கனலாய், தேவ ஆவியில் நிறைந்து.... தேசத்தின் பாவங்களை 'பகிரங்கமாய்' எதிர்த்து கண்டிக்கும் எந்த தேவ ஊழியனும் "தேச துரோகி" என்றுகூட முத்திரை குத்தப்படுவான்! அவனது நாவில், இருபுறமும் கருக்குள்ள வேதவசன பட்டயம் இருக்கிறபடியால் "அன்பற்றவன்...... அணைத்துப் போகத் தெரியாதவன்" என ஜனத்தின் எதிர் – அபிப்பிராயங்கள் அவன் மீது சுமரும்! அவர்களின் மனம் கோணாமல், அணைத்துப் போகும் 'சராசரி பிரசங்கி' வாழ்த்தப்படுவான்! சத்தியத்தை சத்தியமாய் பேசுபவன் துரத்தப்படுவான்! ஆகிலும், கர்த்தரோ மகிமைப்படுவார்!

*-Ed*

### 2024 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்

வருட சந்தா ரூ.170/- தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு ஜுலை 20-ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும். நன்றி!

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## கார்மேகங்களுக்கு பின்னால் என்ன? அது, கர்த்தர்!

*புயலையும் அமர்த்திடும் கர்த்தரையே நம்பியிருங்கள்*

**நா**ம் வாழும் இந்த உலகத்தில் 'அதிகபட்சமான அழகு சுந்தரம்' மேலே பரந்து விரிந்திருக்கும் ஆகாய மேகங்களின் பிரதிபலிப்பாகவே இருக்கிறது! இத்தாலியா நாட்டின் ஆகாய விரிவு எப்போதும் அழகான நீல நிறமாகவே இருக்கும்! அதின் நடுவே பாய்ந்து வரும் மேக கூட்டங்களின் அழகை வேறு எதற்குமே ஒப்பிட முடியாது.

**“ ஆகாய நீல வண்ணத்தின் அழகோடு இந்த பூமி சேர்ந்து இருக்காவிட்டால், இங்கு வாழும் நமக்கு இந்த பூமி வறட்சியான வனாந்தரமாய் தோன்றும்!**

அதற்கொப்பாகவே நம் மானிட ஜீவியத்திலும், மேகங்களும்! நிழல்களும்! தென்றல் காற்றுகளும்! அவ்வப்போது மூடிக்கொள்ளும் காரிருள் மேகங்களும் நமக்கு அருளப்பட்டிருக்கிறது. ஆம், உங்கள் வாழ்வில் மேகங்கள் இல்லாமல், ஒளி இல்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள்! **தன் அழகிய ஏழு வண்ண வானவில்லை, சர்வ வல்ல தேவன், வானத்து மேகங்கள் நடுவேதான் வைத்தார்!** இதை ஒப்பிட்டு யோபு கூறும்போது "ஆகாய மேகத்தில் பிரகாசிக்கும் ஒளியை மனுஷர் காண்பதில்லை" என ஆச்சரியத்துடன் கூறினார் (யோபு 37:22).

நாம் கீழிருந்து காணும் மேகத்தைப்போலவே, மேலிருந்து காணும் மேகத்தை நீங்கள் கண்டால் உங்கள் உள்ளம் பரவசமடையும். ஆங்காங்கு சூரிய ஒளி, அந்த மேகங்கள் ஊடாய் சிதறி வருவதுண்டு! 'ஆல்பஸ் மலை' குன்றுகளைப் போல், அந்த மேகங்கள் எங்கும் பரந்து கிடப்பதைப் போன்று காண்பீர்கள்! இவ்வாறு மேகங்களுக்கு கீழாகவும், மேகங்களுக்கு மேலாகவும் காணும் காட்சி எந்த உள்ளத்தையும் பரவசமாக்கிவிடும்!

நாமோ, கார்மேகத்தின் அடிப்பாகத்தை மட்டுமே காண்கிறோம். ஆனால் அந்த மேகங்களின் உச்சியில் சிதறி விழும் ஒளியின் கதிர் அழகைப் பார்த்திடும் கண்களையுடையவர்கள்

எத்தனை பேர்? அந்த ஒளி, பூமியின் ஆழ்ந்த பள்ளத்தாக்கின் பிரதேசங்களிலும் ஊடுருவிச் செல்வது அதிசயமல்லவா? அந்த வெண் மேகங்கள் தாங்கி வரும் சுத்தமும் சுகாதாரமுமான மழை நீரின் ஒவ்வொரு சொட்டும், குடிப்பதற்கு எவ்வளவு மகத்துவ மாமருந்தாயிருக்கிறது!

ஓ தேவனுடைய சொந்த ஜனமே, உங்கள் துன்பங்களையும், துயரங்களையும் இனியும் ஒருமுகமாய் பார்க்காமல், அதன் எதிர்புறத்திலிருந்து பார்க்கப் பழகுங்கள்! அவ்வாறு நீங்கள் பார்க்கும்போது, நீங்கள் பூமியிலிருந்து பார்ப்பதைப்போல் இனி இருக்கப்போவதில்லை. நீங்கள் கிறிஸ்துவோடு வீற்றிருக்கும் உன்னத ஸ்தலத்திலிருந்து பார்க்கும் பார்வையாய் மாறிவிடும்! பரத்திலிருந்து இருளை கிழித்து வரும் அந்த ஒளி 'வைரக்கல்லில் பட்டதைப்போல்' பல வண்ண ஒளியை உங்களுக்குத் தந்து மகிழ்வித்துவிடும். உங்கள் மனதில் இருந்த மாசுகள் அகன்று 'போதுமென்ற நிறைவான திருப்தியை' தந்துவிடும். ஒன்றை மனதில் கொள்ளுங்கள்: "மேகங்கள் வரும் போகும்! ஆனால் அது வழங்கிய ஒளியை பெற்றீர்களா? அது அருளிய மாசற்ற மழைத்துளி நீர் உங்களுக்குச் சொந்தமாகியதா? இதுவே, ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் சொந்தமான பாக்கியம்!

இப்போது நான், கர்த்தரையே நம்பியிருக்கும் ஆனந்த பாக்கியத்தை பெற்றுவிட்டேன்! ஆகையால்....

> ***இ****த்தனை கொடூரமான புயல் ஏன் என்மேல் வீசுகிறது என விவரித்துக் கூறிட நான் அறியேன்! ஆனால் ஒன்று நான் அறிவேன்.... என் வாழ்க்கைப் பாதையை தேவன் கண்காணித்து வருகிறார். ஆகவே, அவரையே நான் நம்பியிருப்பேன்!*
>
> *அடுத்து என்ன நடக்கும் அல்லது என் எதிர்காலம் என்ன? என்பதை மறைத்திருக்கும் திரையை என்னால் திரை - விலக்கி பார்க்க முடியாது! நான் காத்திருந்து காணப் போவது இருளா அல்லது ஒளியா? என்பதும் எனக்குத் தெரியாது: ஆகிலும், அவரையே நான் நம்பியிருப்பேன்!*
>
> *சீறும் அலைகளுக்குப் பின்னால் என்ன விளைவு? என்பதை நான் அறிந்திட எனக்குப் பெலன் இல்லை! அது, கரையோரத்தில் சம்பவிக்கும் செயலா? அல்லது கடல் சங்கமமாகும் தெளி நீரோடையா? என்பதும் எனக்குத் தெரியாது. ஆனால், ஒன்று நான் திட்டமாய் அறிவேன்: நான் என்றென்றும் அவருக்குரியவன்! ஆகவே, நான் அவரையே நம்பியிருப்பேன்!*

- Mrs.சார்லஸ் கஃவ்மென்

## பொல்லாங்கன் பயன்படுத்தும் "பொய்" வேத அகராதி!

*தங்கள் பிரியத்திற்கு வளைத்து கொள்ளும் வேதமா? எச்சரிக்கை*

**பி**சாசு, ஓர் பொய்யன்! ஏமாற்றும் வஞ்சகன்! குறிப்பாய் 'தேவனுடைய வார்த்தையை' பொய்யாய் திரித்துப் பேசுபவன்! நீங்கள் எவ்வாறு வேதம் வாசிக்கிறீர்களோ தெரியவில்லை? எழுதப்பட்ட வேத வாக்கியங்களை, அப்படியே கண்டு, அதை அப்படியே விசுவாசிக்க முடிகிறதா? வேதப் புத்தகத்தை தாங்கள் எவ்வாறு கையாளுகிறோம் என்ற உணர்வு இல்லாமலே, அதை பக்தியுள்ள புத்தகமாய் கண்ணியத்துடன் வைத்திருக்கிறார்கள்! திரளான விசுவாசிகளுக்கு, வேதத்தில் உள்ள அனேக வலிமையான வசனங்கள், அதுவும் குறிப்பாய் "அவர்களுடைய ஜீவியத்தை மாற்றக்கூடிய வசனங்கள்" புரியாத பாஷைகளாகவே அவர்களுக்கு இருக்கிறது!

ஆகவேதான், **முற்றிலும் நம்பத் தகுந்த வேதப் புத்தகமாய்** நமக்கு எப்போதும் இருக்க வேண்டும். சாத்தானோ, நீங்கள் தூக்கி வரும் வேதப்புத்தகத்தை 'அவனுடைய வஞ்சிக்கும் அகராதியாய்' மாற்றி வைக்க முயலுகிறான்.

> "எழுதப்பட்ட வேதாகமம் ஒரே மாதிரியாய் எல்லோருடைய கையிலும் இருக்கிறது. ஆனால், வேதப்புத்தகத்தைப் பற்றிய அவர்களின் மனநிலையும், சிந்தையும் 'பொய்யை' பற்றிக் கொண்டிருக்கும்படி, வஞ்சகம் செய்துவிட்டான்! அந்த வஞ்சகப் பொய்யே இன்று ஜனங்களுக்கு, எளிதாகவும், கிட்டத்தட்ட மனப்பாடமாகவும் இருக்கிறது!

உதாரணமாய், வேதப்புத்தகத்தில் வாசிக்கும் '*சகலமும்*' அல்லது '*ஒவ்வொன்றும்*' என்ற வார்த்தைகள் அவர்களின் பொய் அகராதியில் 'கொஞ்சமாய்' அல்லது 'மிக கொஞ்சமாய்' என்றே மனதில் வைத்திருக்கிறார்கள்! "இன்று அவருடைய சத்தத்தைக் கேட்டால்" என அவர்கள் வாசிக்கும் 'இன்று' என்பதற்குரிய அர்த்தம் 'வேறொரு நாள்!' 'எனக்கு எப்பொழுது வசதியோ அப்பொழுது' என்பதாகவே வாசிக்கிறார்கள். வேதாகமம் "அநேக நற்கிரியைகளைச் செய்யும்படி" புத்தி சொல்லுகிறது. அனைத்து நற்கிரியைகளையும் இயேசுவே நமக்காக செய்தும் முடித்திருக்கிறார்! அதை மனதில் வைத்துக்கொள்ளச் செய்துவிட்டு, 'இனி நான் எதுவும் செய்ய வேண்டியதில்லை' என்ற பொய்யை நம்பும்படி செய்துவிட்டான்!

வேத வாக்கியங்கள் நாம் ஜெயித்து வாழ வேண்டும் என்ற

அழைப்பை தெளிவாய் கூறியும், இயேசு கிறிஸ்துவைப் போல் நாம் ஜெயம் பெற முடியும் என கூறியும், அந்த வாக்கியங்கள் இன்று அனேகருக்கு வேறொரு பாஷையாகவே மாறிவிட்டது. இதன் கொடிய விளைவாய், 'பொய் அகராதி' நாடிச் சென்ற திரளான விசுவாசிகள் அதில் காண்பது என்னவென்றால் 'முடிந்தால் ஜெயித்து வாழலாம்!' என வாசிக்கிறார்கள். இவர்கள் கண்ட பொய் விளக்கத்தின்படி 'தோல்வி!' என்பதே அர்த்தமாகிவிட்டது. இதுதான் சரியான அர்த்தம் எனவும், புத்தியுள்ளவர்கள் இதைத்தான் ஏற்றுக்கொள்வார்கள் என்பதைப் போலவும் வஞ்சிக்கப்பட்டுள்ளார்கள். வேத வாக்கியம் மிக அதிகாரத்தோடு "அதிக அதிகமாய் தேவபக்தியில் பெருகுங்கள்" எனக்கூறும் பாக்கியத்தை, இவர்கள் வைத்திருக்கும் பொய் அகராதி "உங்களால் முடிந்த அளவிற்கு" என மட்டுப்படுத்தி கூறுகிறது.

> **"இவ்வாறாக, இன்று திரளான ஜனங்கள் புனிதமான வேதப்புத்தகத்தை "பிசாசு வாசிப்பதைப் போலவே" வாசிக்கிறார்கள்! இவன் கற்றுத்தந்த பொய் வேத அகராதி, எந்த திருத்தமும் இல்லாமல் பல கோடி பிரசுரங்கள் அச்சடிக்கப்பட்டு விநியோகப்படுத்தப்பட்டு விட்டன!**

*அவனுடைய பிரசுரம் கூறுகிறபடி "சிலர் வேண்டுமானால் வேதம் கூறுகிறபடி நம்பி வாழலாம்!" ஆனால் பெரும் ஜனத்திரளுக்கு, திருத்தப்பட்ட பிசாசின் வஞ்சிக்கும் அகராதியே மனதிற்கு ஏற்றதாயிருக்கிறது. இதைப் பலரும் பல்லாண்டு காலமாய் பேசி வருகிறபடியால், 'பொய் அகராதி' உண்மை என ஆகிவிட்டது! வஞ்சகனின் இந்தப் பொய் அகராதி வேதப்புத்தகத்திற்கு, வேத சாஸ்திர அறிவுள்ள திறமை ஆசிரியர் 'பிசாசு' என இருக்கிறபடியால், அதனால் அவைகள் உண்மைதான் என நம்பும் அளவிற்கு திரள் ஜனங்கள் சென்று விட்டார்கள். முடிவாக, இந்தப் பொய் வேத பண்டித ஆசிரியர் சுட்டிக்காட்டிய கீழ்தரத்தின்படி "எத்தனை முறை பாவம் செய்தாலும், நமக்கு மன்னிப்பு உண்டு!" என ஆடிப்பாடி மகிழுகிறார்கள். இன்று, வேதத்தின் தூய்மையான சத்தியம் பிசாசின் தந்திர அகராதியினிமித்தம் மாறுபாடாக புரட்டப்பட்டுபோனது மிக வேதனைக்குரியதாகும்!*

இனி, இந்த வஞ்சக காலத்தில், உங்களைக் குறித்தும், உங்கள் குடும்பத்தைக் குறித்தும் உங்கள் சபையைக் குறித்தும் சத்தியத்தின்படி வாழ வேண்டியது **உங்கள் சொந்த பொறுப்பாய்** மாறிவிட்டது! கர்த்தர் உங்கள் யாவரையும் செம்மையான வழியில் நடத்துவாராக! ஆமென்.

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

## தேவனுடைய வார்த்தையை மட்டுப்படுத்தும் அபாயம்!

*'மாறாத கர்த்தரே' நமக்குண்டு*

**மா**றுபாட்டைத் தழுவும் திரளான பிரசங்கிமார்கள், தெய்வ அன்பை பிரசங்கிக்கும் விதத்தைப் பார்க்கும்போது: **"அவர் நீதியுள்ளவர்"** என இதே வேதம் வலியுறுத்தும் அவருடைய அடுத்த குணாதிசயத்தை மறுதலிக்கச் செய்து விடுகிறார்கள்!

> " **இன்னும் சிலர் "தேவன் நல்லவர்!" என்பதை கோபுர உயரத்தில் வைத்து, அதையே போதனையாக்கிவிட்டு "அவர் பரிசுத்தர்!" என்ற உணர்வுக்கோ, ஜனங்களை எதிர்பக்க பள்ளத்தில் நிறுத்திவிடுகிறார்கள்!**

அதுபோலவே 'கர்த்தருடைய மனதுருக்கத்தை' மட்டுமே பிரஸ்தாபப்படுத்திவிட்டு 'அவருடைய சத்தியத்தை' இல்லாமல் போகும்படி செய்கிறார்கள். இன்னும் சிலர், தேவனுடைய சர்வ வல்ல ஆளுகையை, உலக அழிவுக்கு 'தீர்க்கதரிசனங்களை' சுட்டிக்காட்டிவிட்டு, அவருடைய ஆளுகையில் அடங்கியிருக்கும் நன்மையையும் அவரது நடத்துதலையும் வெகுவாய் மட்டுப்படுத்திவிடுகிறார்கள்!

ஆகவே நீங்கள் சத்தியத்தை துல்லியமாய் பற்றிக்கொண்டு வாழ வேண்டுமென்றால், தேவன் தன்னைக்குறித்துக் கூறிய அனைத்து குணாதிசயங்களையும் அப்படியே மனதார விசுவாசிக்கப் பழக வேண்டும்.

> " **தேவன் தன்னைக் குறித்து வெளிப்படுத்திய குணாதிசயங்களை ஒருவன் "திருத்த - Edit" செய்திட முயல்வது அவனுடைய அறியாமையில் வீழும் மாபெருங் குற்றமாகும்!**

தேவத்துவத்தில் அடங்கியிருக்கும் 'மூன்று நபர்களும்' தனித் தனியாக செயல்படாமல், அவர்கள் மூவரும் இசைந்து செயல்படும் மகத்துவமான சத்தியங்களே, நாம் கையில் வைத்திருக்கும் வேதாகமம் என்பதை நம்மில் ஒருவரும் மறந்துவிடக் கூடாது!

"நம் பரம பிதா" தன்னுடைய தன்மையிலிருந்து ஒருபோதும் மாறாதவர்! என்ற சத்தியம், கிறிஸ்தவர்களாகிய நம்முடைய இருதயத்திற்கு அளவிற்கடங்காத சமாதானத்தைக் கொண்டு வருகிறது.

அவர் தமது சத்தியத்தில் ஒருபோதும் 'சமரசம்' செய்திட மாட்டார்! அவருக்கு 'மாய அன்புகாட்டி' யாரும் அவரைத் தன் வசப்படுத்த முடியாது. இவ்வாறு, தம்முடைய வார்த்தையை சற்றுமாற்றி அமைத்துக்

*கொள்ள யாரும் முயற்சித்திட கர்த்தர் இடம் கொடார்! நாம் அவரைப் பிரியப்படுத்த விரும்பும் எல்லா முயற்சியிலும், 'மாற்றம்' என்ற பகுதி நம்மைச் சார்ந்ததாகவே எப்போதும் இருக்க வேண்டும்! அவரோ* "**நான் கர்த்தர், நான் மாறாதவர்**" *என்றே உரைக்கிறார். அவரைக் குறித்த உறுதித் தன்மையை கண்டவர்களுக்கு மாத்திரமே, அவர்கள் ஜீவியத்தை, "தன்னுடைய அளவில்லாத வல்லமைக்கும்! வெளிப்படுத்தப்பட்ட அவரது தூய சித்தத்திற்கும்! சத்திய வேத வாக்கியங்களின் பரிபூரண சுவிசேஷத்திற்கும்!" அவர்களை கொண்டு வந்து கர்த்தர் நடத்திட முடியும்!*

*ஒரு கப்பல் மாலூமி, தன்னுடைய பயண திசையை, பிரகாசிக்கும் சூரியனுக்கு நேராய், நிலை நிறுத்தி வைத்துக்கொள்வது போலவே.....* "**நான் கர்த்தர், நான் மாறாதவர்!**" *என உரைத்த தேவனை நோக்கி நம்முடைய ஒவ்வொரு நாள் ஜீவியத்தையும், ஊழியத்தையும், நேர்த்தியாய் துவங்க வேண்டும்! அப்படிச் செய்ய தவறுவோமென்றால், 'அவர் இருக்கிறதைப்போலவே' நம்முடைய ஜீவியத்தை சரிசெய்து கொள்ளத் தவறி, வழி மாறி விடுவோம்! அவருடைய தன்மையை மாற்ற விரும்பும் அநேகர்,* **தேவனுடைய சாயலை, மனுஷருடைய சாயலுக்கு ஒப்பாய் மாற்ற முயற்சிக்கிறார்கள்** *என்பதை நாம் அறியக்கடவோம்! தேவனை, அவர் இருக்கிறவண்ணமாகவே அறிந்து கொள்வதும், அவர் செய்கின்ற செயல் அனைத்திலும் அதை மனதார ஏற்று* **அவரை அன்புகூர கற்றுக்கொள்வதுமே, ஒவ்வொருநாள் ஊழியத்திலும் ஜீவியத்திலும் இருந்திட வேண்டும்!** *இவ்விதமாய் 'அவர் இருக்கிறவண்ணமாகவே அவரை அறிவதுதான்' சொல்லி முடியா மகிழ்ச்சியை நாம் கண்டடைய வழி வகுக்கிறது!*

*கடந்த 20-ம் நூற்றாண்டின் மத்திய காலம் துவங்கியே, உன்னதத்தின் சர்வவல்ல தேவனை மட்டுப்படுத்தி 'அவர் மாறாதவர்' என்ற அவரது தகுதியை போற்றுதற்குரியதாய் கருதி வாழாதபடியால், இன்றைய கிறிஸ்தவர்களின் ஜீவியம்* '**கற்புநெறி தவறும்**' **ஒழுக்க கேடாய்** *மாறிவிட்டது. இதன் விளைவாய், அவருடைய திவ்விய பிரசன்னத்தை உணரும் விலையேறப்பெற்ற பாக்கியத்தை இன்றைய கிறிஸ்தவம் இழந்துவிட்டது! தாழப்பணிந்து 'அலங்கரிக்கப்பட்ட பரிசுத்த மௌனத்தில்'* **தேவனை சந்திக்கும் அந்தரங்க வாழ்க்கை** *வெகுவாய் தளர்ந்துவிட்டது. ஓ கிறிஸ்தவமே, விலையேறப்பெற்ற இந்த 'ஆராதனை ஆவியை' இழந்து வாழ்வது நியாயம்தானா? இந்த கேள்விக்கு நல்ல பதிலை தந்துவிட்டு, உங்கள் எஞ்சிய கிறிஸ்தவ வாழ்க்கையை வாழுங்கள்! ஆமென்.*

*- A.W.டோசர்*

## ‘டயோஸியஸின்’ முகாந்தரமற்ற தீமைகளை சகித்தேன்!

*புயலில் ‘சாந்த குணம்’ அமைதி தரும்*

*பிரான்ஸ் தேசத்தில் ‘மார்சியானஸ்’ என கௌரவமாய் அழைக்கப்படும் ராஜ பரம்பரை சகோதரி, அரசவை உயர் பதவியில் இருந்தபோதும், பக்தியுள்ள சகோதரியாய் இருந்தார்! சில வருடங்களுக்கு முன்பாக டூரின் நகரத்திலிருந்து எனக்கு ஒரு கடிதம் எழுதினார்கள்: அந்த கடிதத்தில் “உங்கள் சரீர சுகவீனத்தை அறிந்தேன். நீங்கள் தாராளமாக எங்கள் மாளிகைக்கு வந்து ஓய்வெடுக்கலாம்.* **உங்கள் டயோஸிஸில் நீங்கள் அடைந்திடும் துன்பங்கள் மாறும்வரை** *எங்களோடு பாதுகாப்பாய் இருக்கலாம்! நீங்கள் எப்போது திரும்பிச் செல்ல விரும்புகிறீர்களோ, அப்போது உங்களோடு சேர்ந்து பாரீஸ் நகரத்திலுள்ள பக்தியுள்ள இளவரச பரம்பரையை சேர்ந்த சகோதரி, (நடுத்தர வயதுள்ள விதவை) தேவ சித்தமானால் உங்களோடு சேர்ந்து கர்த்தருடைய பணியை செய்வதற்கு ஆர்வமாய் இருக்கிறார்” எனவும் எழுதினார்கள். அச்சமயத்தில் அவருடைய விருப்பத்திற்கு இணங்கும் சூழ்நிலையில் நான் இல்லை. நானோ சூழ்நிலைகளை கர்த்தர் மாற்றும்வரை கன்னிமாடத்திலேயே இருக்க அன்று தீர்மானித்துவிட்டேன். இதை அறிந்த அந்த சீமாட்டி சகோதரி, என்னை ஏதும் கட்டாயப்படுத்தவில்லை!*

*என்னோடு வர விருப்பம் தெரிவித்த அந்த சகோதரியை நான் அறிவேன். என்னைப்போலவே அவர்களும் இளம் வயதிலேயே விதவையாகிப்போன பக்தியுள்ள சகோதரி! ஆகிலும், ராஜ மேன்மைக்குரிய தன்னுடைய வசதிகளை புறக்கணித்துவிட்டு, முற்றிலுமாய் தன்னை தேவனுடைய பணிக்கு ஒப்புக்கொடுக்க வாஞ்சித்த உண்மையுள்ள சகோதரி.*

> “ **தன் 22-ம் வயதில் விதவையாகிப்போன அவர்கள், தன்னை மறுமணம் செய்து கொள்ள விரும்பிய அநேக பிரபுக்களை மறுத்துவிட்டு, தன் முழு ஜீவியத்தையும் கர்த்தருக்கென்றே ஒப்புவித்துவிட்ட சிறந்த ஆவிக்குரிய சகோதரி!**

*இங்கு எனக்கு சம்பவித்த காரியங்கள் யாதொன்றும் அறியாத அந்த சகோதரி, தந்தை லா-கோம்பேயுடன் சேர்ந்து டூரின் நகரத்திற்கு வருகை தரும்போது அவர்களோடு சில வாரங்கள் தங்கியிருக்கும்படியும், தானே பூரண அடைக்கலம் தருவதற்கு ஆயத்தமாய் இருப்பதாகவும் தகவல் சொல்லி அனுப்பினார். களங்கம் ஏதும் இல்லாமல், இந்த*

ராஜ மேன்மை கொண்ட சகோதரி தானாகவே முயற்சி செய்தது யாதொன்றையும் நான் அறிந்திருக்கவில்லை! இவ்வாறு என்னை அணுகும்படி 'ஒரு கன்னிமாடத் தலைவி' ஊக்குவித்ததை நான் பின்புதான் கேள்விப்பட்டேன். ஆனால் உண்மையில் அந்த கன்னிமாடத் தலைவிக்கு, ஜெனிவா பிஷப் மூலம் நான் அடைந்து வரும் உபத்திரவங்கள் அவர்களுக்குத் தெரியாது.

**"ஆனால் இதை கேள்விப்பட்ட ஜெனிவா பிஷப் அவர்கள், என்னை அனுதாபத்தோடு பரிந்துரை செய்த இந்த களங்கமற்ற கன்னிமாடத் தலைவிக்கு பல உபத்திரவங்களைக் கொடுத்துவிட்டார்!**

பிஷப் அவர்கள், தொடர்ச்சியாய் என்னைப் பின்தொடர்ந்து தீமை பல செய்தது, எனக்கு மிகுந்த ஆச்சரியமாயிருந்தது! நானோ "அவருக்கு அல்லது அவருடைய டயோஸியஸிற்கு யாதொரு தீங்கும் செய்தது இல்லை!" அதற்கு மாறாக, என்னால் இயன்ற பல தியாகங்களையும் நன்மைகளையும் அவருடைய டயோஸிஸிற்கு செய்திருந்தேன். என்னை அவர் பகைத்ததற்கு யாதொரு முகாந்திரமும் எனக்குத் தெரியவில்லை!

எனக்கென்று யாதொரு நோக்கமும் வைத்திராதபடியால், பிஷப்பிடமிருந்து அனுபவித்த இன்னல்களை 'தேவ சித்தம்' என்றே விசுவாசித்தேன். நிந்தையும் பாடுகளும் ஒருபுறம் என்னை துரத்தியதுபோல் இருந்தாலும், கர்த்தரோ நன்மையானதை தீர்மானித்தார் என்பதையும் நான் காண முடிந்தது. எப்படியெனில் *தந்தை லா-கோம்பே* அவர்களுக்கு '*வெர்ஸில் மாகாணம்*' ஆவிக்குரிய ஊழியத்திற்கென முழு பொறுப்பாய் தரப்பட்டு இருந்தது. ஆகவே அவரே என்னை *டூரின்* பட்டணத்திற்கு சூழ்நிலை மாற்றத்திற்கென என்னை அழைத்துச் சென்று, பின்பு அவர் *வெர்ஸில் மாகாணத்திற்குப்* போக இருப்பதாக, எனக்கு தகவல் தரப்பட்டது!

இப்படி ஒரு பயண ஏற்பாடு இருந்த நிலையில், அந்நாட்களில், சுமார் 14-வருடங்களுக்கு முன்பாக நான் ஆவிக்குரிய நிலைக்கு வருவதற்கு உதவிய முதியவர் என் பயணத்தின்போது வருவதற்கு சம்மதித்தார். இந்த பரிசுத்தவான், "என்னால் தாங்க முடியாத சில குற்றச்சாட்டுகளிலிருந்து ஜெயித்து வர" ஆவிக்குரிய உதவி செய்தவர். அதோடு சேர்ந்து, நான் பிரான்ஸ் தேசத்திலிருந்து வந்தபோது, கூடவே வந்த ஒரு பையனும் பயணத்தில் என்னோடு வருவதாக தீர்மானித்தேன். அவர்கள் குதிரையில் பயணம் செய்யும்படி ஏற்பாடு செய்து, நானும் என் மகளும், என் தங்கும் அறை உதவிப் பெண்ணும், கோச் வண்டியில்

*வருவதற்கு ஏற்பாடு செய்தேன். ஆனால் தேவனோ இந்த ஏற்பாடுகளை ஒன்றும் இல்லாதபடி செய்வது அவருக்கு விருப்பமாய் இருந்ததை நான் கண்டேன். எப்படியெனில், என்னுடைய இந்த பயணத்தை முன்வைத்து நூற்றுக்கணக்கான பொய்யான கதைகளும் குற்றச்சாட்டுகளும் பாரீஸ் டயோஸிஸில் குவிந்து விட்டன.*

> **அதை நான் கேள்விப்பட்டபோது, "தாங்களாக கற்பனை செய்து இப்படியும் குற்றம் சாட்டுகிறவர்கள் இந்த உலகத்தில் உண்டோ?" என்றே நான் வியப்படைந்தேன்.**

*உண்மை என்னவென்றால், தந்தை தி-லா-மோத்தி அவர்கள்தான் இவ்வளவு தீமைகளை வடிவமைப்பதற்கு பின்புலமாய் இருந்தார்கள். அவர் எப்படி இவைகளை எழுதினார்? எத்தனை பேர்களுக்கு பொய்யான குற்றச்சாட்டுகளை அனுப்பினார்? என்றெல்லாம் எனக்கு முழுமையாகத் தெரியவில்லை!*

*அவர்கள் கூறிய தீது மொழிகள் கொஞ்சம் நஞ்சமல்ல! நானும் தந்தை லா-கோம்பே அவர்களும் அடிக்கடி தனியே வெளியில் உலாவி சேர்ந்து சென்றதாகவும், சில மாகாணங்களுக்கு அவர் என்னை அழைத்துச் சென்றதாகவும், இவ்வாறு தீமையை பிணைத்து மிக மோசமாய், தர குறைவாய், பல கதைகளை எழுதியிருந்தார்கள்! நானும் பயணம் செய்த என் குடும்பமும் அந்த கொடிய தீமைகளை பொறுமையுடன் சகிக்க எங்களை திடப்படுத்திக்கொண்டோம். அவர்களின் பல்வேறு குற்றச்சாட்டுகளை நியாயப்படுத்தவோ அல்லது யாதொரு புகார்களை மாறுத்தரமாய் சொல்வதற்கோ மறுத்து, அமைதியாய் பாடுகளை சகித்தோம்!*

*- மேடம் குயான்*

---

## விசுவாசத்தில் 'இயேசுவைத் தொடும்' பாக்கியம் நமக்குண்டு!

*இன்று 'விசுவாசமே' தேவனுக்கு உகந்த கிரியை*

ஒரு மனிதன் இயேசுவைத் தேடி, பின்பு அவரைக் கண்டுபிடிக்க முடியாத சாத்தியம் ஏதும் உண்டோ? ஜெப ஆலயத்தலைவனாகிய யவீரு 'மரிக்கும் தறுவாயில் இருந்த' தன் மகளுக்காக இயேசுவைத் தேடினான், அவரை கண்டுபிடித்தான்! அவனைப்போலவே நீங்களும் அவரை உங்கள் இக்கட்டில் தேடி, கண்டுபிடித்துவிட முடியும். *"தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்"* (மத்.7:7) என்ற, தேவனை அறிகின்ற இனிமையான இந்த வசனத்திற்கு ஒப்பானது வேறு எதுவும் இல்லை என்றே சொல்லலாம்.

“

**நீங்கள் கர்த்தரைத் தேடும் நேரம் எப்போது துவங்குகிறதோ “அதே நேரத்தில்” நீங்கள் தேவனைக் கண்டடையும் நேரமும் துவங்கிவிட்டது என்பதை அறியுங்கள். கெட்ட குமாரன் மனந்திரும்பி தன் வீட்டிற்கு நேராய் திரும்பின அதே சமயத்தில், அவனுடைய தந்தையும் அவனை நோக்கி திரும்பி விட்டார்! இந்த அதிசயத்தை லூக்கா 15:11-24 வசனங்களில் வாசித்து கர்த்தரைத் துதியுங்கள்.**

அதுபோலவே, ஒரு பெரும்பாடுள்ள ஸ்திரீ தனக்குள் சொல்லிக் கொண்டாள். “நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன்” (மாற்கு 5:27). அவளைப்போன்ற இந்த உள்ளான ஆசை, உங்கள் உள்ளத்தில் இருக்கிறதா? இதுபோன்ற ஆசை கொண்டவர்கள் இயேசுவை சந்தித்து அவரைத் தொட்டு அறியாமலிருப்பது கூடாத காரியமாகும்! ஏனெனில் “என்னைத் தேடுகிறவர்கள் என்னை கண்டடைவார்கள்” என்றே எரேமியா 29:12 உறுதிபட கூறுகிறது. இந்த ஸ்திரீயின் வாஞ்சை அவள் உள்ளத்தில் நாளுக்கு நாள் பெருகி “**அவர் வந்துவிட்டார்**” என்ற சத்தம் கேட்டு ஓடோடிச் சென்றாள். கூட்டம் எவ்வளவுதான் நெருக்கி இருந்தாலும், அவள் முண்டியடித்து அவரைத் தொட்டுவிட்டாள்! இது ஏதோ ஒரு மாயை அல்ல, உங்கள் இருதயத்திற்குள் நடைபெறும் உறுதியான செயலேயாகும்!:

*அந்த ஸ்திரீ ‘இயேசுவைத் தொட்டு சுகமான நிகழ்வு’ முடிந்தவுடனே, இயேசு உயிர்த்தெழுந்து சென்றுவிட்டால், என்னையும் உங்களையும் போன்றவர்கள் திருப்தியடைய மாட்டோம் என்பது இயேசுவுக்குத் தெரியும்! இந்த ஸ்திரீ செய்ததைப்போலவே நானும் இயேசுவை சரீரப்பிரகாரமாய் தொடும் பாக்கியம் இல்லாமல்போய்விட்டதே என்ற அங்கலாய்ப்பு ஏற்படும். அந்த அங்கலாய்ப்பை போக்குவதற்கு இயேசு திரும்பி “என்னைத் தொட்டது யார்?” என்ற ஆச்சரியமான கேள்வியைக் கேட்டார். அதற்கு பேதுரு “என்ன ஆண்டவரே, திரளான ஜனங்கள் உம்மை நெருக்கிக் கொண்டிருக்க என்னைத் தொட்டது யார் என கேட்கிறீரே” என வியந்தான். ஆனால் இயேசுவின் கண்களோ கூட்டத்தை சுற்றிப் பார்த்து “**ஒருவர்** என்னைத் தொட்டதுண்டு” என தேடினார் (லூக்.8:45-46).*

*இயேசுவின் இந்த பதில், நமக்குத் தரும் நம்பிக்கையைப் பார்த்தீர்களா! நீங்கள் அவரை நெருங்கி இருக்கலாம், ஆனால் அவரைத் தொட வேண்டிய பகுதி, **சிறு கடுகுபோன்ற விசுவாசத்தின் தொடுதலேயாகும்!** அந்த ஸ்திரீ உடனே திரும்பிப்பார்த்து “நான் தான் ஆண்டவரே!” உம்மைத் தொட்ட அதே வேளையில் உதிரத்தின்*

*ஊரல் நின்று, வேதனை நீங்கி, ஆரோக்கியமடைந்ததை, என் சரீரத்தில் உணர்ந்தேன்! (மாற்கு 5:29,33) என மகிழ்வுடன் கூறினாள். இங்குதான் இயேசு கூறிய வார்த்தையை நீங்கள் கவனிக்க வேண்டும். "மகளே* ***உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது,*** *நீ சமாதானத்தோடே போ, உன் வேதனை நீங்கி சுகமாயிரு" (வச.34) என பூரண சுகமளிக்கும் வார்த்தைகளை உறுதிப்படுத்தி அனுப்பினார்.*

*இப்போது பார்த்தீர்களா வித்தியாசத்தை "நீ என்னைத் தொட்டதால் சுகமானாய்!" என அவர் கூறி பரத்திற்கு சென்று விடவில்லை! மாறாக, நம் எல்லோருடைய வாழ்விற்கும் சாத்தியமான மகிழ்ச்சி பொங்கும் சுவிசேஷமாக* ***"உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது"*** *என்றல்லவா கூறிவிட்டார். இந்த அருமை ஆண்டவருக்கே துதியும் ஸ்தோத்திரமும் என்றென்றும் உண்டாவதாக! ஆம், இப்பொழுது உங்களுக்குள்ளிருக்கும் "உங்கள் உயிருள்ள விசுவாசம்" அவரைத் தொட்டுவிட முடியும்!! தொடுவது ஓர் வெளிப்புற கிரியை! ஆனால் விசுவாசிப்பதோ உங்கள்* ***இருதயத்தில்*** *சம்பவிக்க வேண்டும்! இயேசு நம் எல்லோரையும் நோக்கி "நீ விசுவாசிக்க கூடுமானால்.... எல்லாம் கூடும்" என்றே அழைக்கிறார்! (மாற்கு.9:23).*

இப்போது **தொடுவதற்குரிய கிரியைக்கு** வாருங்கள்.... ஜனங்கள் இயேசுவிடம் அதைத்தான் கேட்டார்கள்! நீங்களும் அதைத்தானே கேட்கிறீர்கள்: "தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்ய வேண்டும்" என கேட்டார்கள் (யோவான்.6:28). அதற்கு இயேசு "தேவன் அனுப்பின இயேசுவை **நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது!**" (வச.29) என ஆணித்தரமாய் மீண்டும் கூறிவிட்டார்! இயேசுவின் சுவிசேஷம் நமக்கு வழங்கியிருக்கும் இந்த மாறாத மகிழ்ச்சி தரும் சுவிசேஷத்திற்காய் நாம் அவருக்கு நன்றியுள்ளவர்களாய் இருந்திடக்கடவோமாக!

*- ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்*

---

## 'அதிகாலையில்' வசந்தம் தரும், சங்கீதப் புத்தகம்!

*இன்றைய 'சினிமா பாணி' சங்கீத சத்தியங்களை புறக்கணித்ததோ?*

என் மாணவ பருவத்தில், 1962-ம் ஆண்டு தேவனுடைய பிள்ளையாய் மறுபடியும் பிறந்தேன். அந்நாள் முதற்கொண்டு, நடு இரவில் கண்விழித்து சங்கீதப் புத்தகத்தில் சில வசனங்கள் வாசித்து, ஜெபித்து தூங்கி விடுவேன். இந்தப் பழக்கம் விழித்தெழும் காலை நேரத்தை எனக்குப் பரவசமாய் மாற்றித் தந்தது! மேலும், ஞாயிற்றுக்கிழமை மதிய உணவிற்கு முன்பாக, ஒரு சங்கீதத்தை என்

*தாயாரிடம் மனப்பாடமாய் ஒப்பிப்பதை எங்களின் கடமையாய் மாற்றி விட்டார்கள்!*

*'சங்கீதப் புத்தகம்' இஸ்ரவேலர்களின் பாமாலை புத்தகமாய் நிலை நிற்கிறது.* **"வேதாகமத்தின் இருதயம்!"** *என்றே இந்தப் புத்தகம் அழைக்கப்படுகிறது. மார்டின் லூத்தர் இந்தப் புத்தகத்தை குறிப்பிடும்போது "அழகான சின்ன வேதாகமம்" என பெயரிட்டார்! 4-ம் நூற்றாண்டில் பிரசித்திப் பெற்ற ஜெரோம் என்ற வேத சரித்திர ஆசிரியர், இந்த அருமையான சங்கீதப்புத்தகத்தை "வேதாகமத்திற்குள் வைக்கப்பட்ட ஓர் சிறிய வேதாகமம்" எனக் குறிப்பிட்டார். எபிரெய மொழியில், சங்கீதப் புத்தகம் 'துதி' என்றே அழைக்கப்படுகிறது! என் சொந்த நாசரேத்தூரில் இருக்கும் ஆங்கிலிக்கன் சபையில், ஒவ்வொரு ஞாயிறு ஆராதனையிலும், சங்கீதங்கள் 'இன்னிசையோடு' பாடப்படும்! ஒரு கட்டுரையை மனப்பாடம் செய்வதைவிட 'ஒரு பாடலை' இசையோடு கேட்டு மனப்பாடம் செய்வது எளிது.*

***ந**ன்றி உள்ளத்தோடு சங்கீதங்களை முழங்காலில் நின்று வாசிப்பது, நம் துதி ஸ்தோத்திரத்தை தேவனுக்குப் பிரியமானதாய் மாற்றி விடும்:*

"

**தாவீதரசன், தன் ஆட்சிக்காலத்தில் 288 லேவியர்களை வைத்து, இன்னிசை கருவிகளோடு சங்கீதங்களை வாசிக்கச் செய்தார். ஆலய ஆராதனையை எத்தனை அழகுள்ளதாய் மாற்ற முடியுமோ அத்தனையாய் தாவீது அதிக பிரயாசப்பட்டார். எருசலேம் ஆலயத்தில், தாவீதின் பாடல் குழுவில் 'ஆசாப்' முன்நின்று நடத்தும் தலைவனாய் நியமிக்கப்பட்டிருந்தான்! (1நாளா.15:16,17, 2நாளா.29:30).**

*2சாமுவேல் 23:1-ம் வசனத்தில், "இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய் பாடின ஈசாயின் குமாரனாகிய தாவீது" என அன்போடு அழைக்கப்பட்டார்! தேவனுடைய நெருங்கிய தொடர்போடு தன்னை வைத்து, தொடர்ந்து கூறுகையில் 1) கர்த்தரால் மேன்மையாய் உயர்த்தப்பட்டவன் 2) யாக்கோபுடைய தேவனால் அபிஷேகம் பெற்றவன் 3) "என்னைக் கொண்டு கர்த்தருடைய ஆவியானவர் பேசினார்" என்றும் வல்லமையாய் சாட்சி பகர்ந்தார்! இஸ்ரவேல் மக்களை தாவீது எப்படி ஆட்சி செய்ய வேண்டும்? என கர்த்தர் அவருக்கு கூறியதை, தொடர்ந்து அந்த வசனங்களில் குறிப்பிட்டார்: 1)* **மந்தாரம் ஏதும் இல்லாமல்** *உதிக்கும் அதிகாலை வெளிச்சமாய் இருக்க வேண்டும்! 2) மழைக்கு பிற்பாடு,* **சூரிய ஒளியில் முளைத்து எழும்பும் புல்லைப்போல்** *இருக்க வேண்டும்! என, தன்னிடம் கர்த்தர் கூறியதாகச் சொல்வார். சபையை முன்நின்று நடத்தும் தேவ*

*ஊழியர்கள், இதுபோன்ற வசந்தத்தை இழந்திருப்பதால் சபைக்குள் அந்த மென்மையான 'நற்கந்த' இனிமையை காண்பது அரிதாகி விட்டது! சுமார் 70- சங்கீதங்கள் 'தியான சங்கீதங்களாய்' உள்ளன! அதாவது, துன்ப நேரத்தில் கர்த்தரோடு ஆத்துமா இசைந்து பாடும் சங்கீதங்களாய் உள்ளன. இயேசுவும் அவருடைய சீஷரும், பஸ்காவின் அன்று ராத்திரியில் தாவீதின் பாமாலையை பாடிச் சென்றார்கள்! (மத்.26:30). பவுலும் சீலாவும், சிறைச்சாலையில் கட்டப்பட்டிருந்த வேளையில் 'சங்கீதங்கள் மூலமாய் தேவனை துதித்துப் பாடினார்கள்' (அப்.16:25). அதுபோலவே, "சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திச்சொல்லக்கடவோம்" எனவும் வாசிக்கிறோம் (எபே.5:19).*

*இன்றுள்ள அநேக ஸ்தாபன சபைகளிலும், சுயாதீன சபைகளிலும் பாரம்பரியமாய் 'மாறி மாறி சங்கீத வசனங்களை' வாசித்திடும் இன்பமான பழக்கம், கொஞ்சம் கொஞ்சமாய் அழிந்து போவதைக் காண்பது வேதனையாயிருக்கிறது!*

> **"சமீப வருடங்களில் முளைத்து வரும் அநேகமான பாடல்களும், பல்லவிகளும் உயிரோட்டம் இல்லாத 'இரத்த சோகை பிடித்ததாய்' இருக்கிறதல்லவா!**

*பாடலின் ராகத்திற்காக, சத்தியத்தின் பேரழகு தூக்கி வீசப்படுகின்றன! இதை வாசிக்கும் நீங்கள் யாவரும், வேதம் புத்தி சொல்லுகிறப்படி "நம் தேவனை ஆவியோடும், சத்தியத்தோடும் (Truth)" ஆலயத்தில் தொழுது கொள்ளும்படியான எழுப்புதலை நாம் காணும்படியான கிருபையை கர்த்தர் கட்டளையிடுவாராக!*

*- R.ஸ்டான்லி BYM*

---

## எது 'தோல்வி இல்லாத' ஜெய ஜீவியம்!

*தெய்வ அன்பு ஒன்றே தோற்றுப்போவதில்லை*

"அன்பு ஒருக்காலும் ஒழியாது" என கூறும் 1கொரி.13:8, ஆங்கில வேதாகமத்தில் "LOVE NEVER FAILS" என்றே தெளிவாகக் கூறப்பட்டுள்ளது! இந்த அதிகாரம், பொதுவானதாக இல்லாமல், ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்து வரும் அல்லது பல்லாண்டு விசுவாச ஜீவியத்தில் வேர்கொண்ட கிறிஸ்தவர்களுக்கே கூறப்பட்ட பிரதான எச்சரிப்பின் அதிகாரமாகும்! அவர்கள் தீர்க்கதரிசன 'வேத இரகசியங்களை' அறிந்து போதித்தவர்களும், சகல விசுவாசமுள்ளவர்களும், ஏழைகளுக்கு உணவு நன்கொடை

*கொடுப்பவர்களுமாயிருந்தும்கூட, காலங்கள் செல்லச் செல்ல 'தேவ அன்பையும், ஒருவரையொருவர் நேசிக்கும் அன்பையும் இழந்து தோற்றபடியால்' ஒன்றிற்கும் பிரயோஜனமற்றவர்களாய் மாறிவிடும் அபாயத்திலிருந்தார்கள்! (1கொரி.13:1-3).*

*அதுஏனென்றால் "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது!" என்ற தெய்வீக வழியில் இவர்கள் தொடர்ச்சியாய்* **முடிவுவரை கடந்துவர தவறிவிட்டார்கள்!** *(1கொரி.13:4).* இந்த வசனம், ஆங்கில மொழிபெயர்ப்பின்படி "LOVE SUFFERS LONG AND IS KIND!" *அதாவது "அன்பு, ஓர் நீடித்த துன்பங்களை சகித்து, பின்பு தயை காட்டும் கனிவான அன்பாய் மாறுகிறது"* இதுவே 1கொரி.13:4-ம் வசனத்தின் தெளிவான பொருள்! ஆம், தெய்வீக அன்பில் நிலைத்து வாழாதிருக்கும்படி, ஏராளமான சவால்களும் தாக்குதலும் "இயேசு காண்பித்த, இடுக்கமான ஜீவ வழியில்" நடந்து வரும் ஒரு கிறிஸ்தவன் *சந்திக்க அவசியமாயிருக்கிறது!* இவ்வித தாக்குதல்களில், நமது தெய்வீக அன்பு சோதிக்கப்பட்டு, அன்பிற்கு மாறாக தூண்டப்படும் 'நமது சுயம்' "பாடுபட வேண்டிய நீடித்த வழியே" இயேசு காண்பித்த "சிலுவையின் வழியாகும்".

> "
> **நமது சுயம் சிலுவையில் அறையப்படும் நீடித்த பாடுகளுக்குப்பிறகு, மரித்து 'திவ்விய அன்பை' பிறக்கச் செய்கிறது! இயேசு நமக்கு முன்னோடியாக "தனக்கு ஏற்பட்ட அவமானத்தையும், பாவிகளால் ஏற்பட்ட விரோதங்களையும் "சிலுவையில் சகித்தே" பிதாவின் வலதுபாரிசத்தில் "அன்பில் தோல்வி அடையாமல்" ஜெயமாய் அமர்ந்தார்!**

***இ****து ஒரு பேரானந்த தெய்வ அன்பின் ஜீவியமல்லவா? உங்களுக்குச் சொந்தமாய் மாறும் இந்த தெய்வீக அன்பிற்கு, பொறாமையில்லை! தற்புகழ்ச்சி நாட்டம் இல்லை! இறுமாப்பான அகந்தை இல்லை! அயோக்கியமான முரட்டு குணம் இல்லை! தன்னையே பிரியப்படுத்த துடிக்கும் பேராசை இல்லை! கோபமடையும்படி தூண்டப்படுவதில்லை! மனதில் தீமை வைத்திருப்பதில்லை! எந்த அநியாய சந்தோஷத்தையும் மறுத்து சத்தியத்தில் மாத்திரமே சந்தோஷப்படும்! (1கொரி.13:4-6). பார்த்தீர்களா, இதுபோன்ற சுயத்தின் தீமைகள் சிலுவையில் அறையப்பட்டு, பாடுபட்டு மரித்து,* ***பிறந்திடும் தெய்வீக அன்பு*** *மெய்யாகவே பேரின்ப ஜீவியமாகும். இந்த சிலுவைப் பாதையில், உருவாகி 'நிறைவாக' பூத்து மலரும் அதிசய பேரானந்தம் என்னவெனில்: "இந்த தெய்வ அன்பு*

*சகலத்தையும் தாங்கும்! சகலத்தையும் விசுவாசிக்கும்! நம்பிக்கை இல்லா குணம் ஒழித்து, சகலத்தையும் நம்பும்! சகலத்தையும் சகிக்கும்! (1கொரி.13:7).*

இவ்வாறாக சுதந்தரித்த "அன்பே, ஒருக்காலும் ஒழியாது." "பாவத்தின் மீது வெற்றி" என்பதை ஓர் கொள்கையாக கூறிக்கொள்வது தவறு! ஏனெனில் "கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிற படியால் பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது!" எனக் கூறும் ரோமர் **6:14**-மேன்மையை மெய்யாகவே நிரூபித்து வாழும் தேவதாசர்கள் அனேகரில்லை.

**"ஏனெனில், புதிய உடன்படிக்கையில் 'எல்லோரும் காணும்' விபச் சாரத்தை அல்ல.... ஒருவரும் காண முடியாத 'இருதயத்தில் நடைபெறும் விபச்சாரத்தை' ஒருவன் மேற்கொள்வதே உண்மையான ஜெயம்!**

ஒருவனின் 'இருதயத்தில் நடைபெற்ற விபச்சாரத்தை' யாரும் கண்டிட முடியாது! அந்த விபச்சாரத்தை ஜெயித்திட உதவும் பரிசுத்தாவியின் வல்லமையான 'கிருபையை' ஒருவன் பெற்றுள்ளானா? எனவும் யாரும் கண்டிட முடியாது! யாதொருவன் "தேவனுக்கு முன்பாக தெய்வ பயத்தில் வாழுகிறானோ" அவன் மாத்திரமே, தன் அந்தரங்க விபச்சாரத்தை, அல்லது அசுசியான மறைந்திருக்கும் சிந்தையை, தேவ கிருபை மூலமாய் 'பாவம் மேற்கொள்ளாத' ஜெயத்தை நாள்தோறும் பெற்று மகிழ்வான்!

**"இதுவே அல்லாமல், எங்கள் சபையின் உபதேசம் "பாவத்தின் மேல் வெற்றி" என, அங்குள்ள எல்லோரும் உபதேசத்தை மையப்படுத்தி மேன்மை பாராட்டுவது எவ்விதத்திலும் சரியானது இல்லை! அது, மற்ற எந்த சபைகளிலும் இல்லாத 'பாவத்தின் மேல் வெற்றி' உபதேசம் எங்கள் சபையில்தான் உள்ளது என மார்தட்டும் அகங்காரத்திற்கே வழிவகுக்கும்! :**

*ஆனால், "தோற்றுப்போகாத அன்பு!" என்ற ஜெயமோ, ஒருவனுடைய வாழ்க்கையில் 'வெளியரங்கமாய்' பிரகாசித்திடும் ஜெயமாகும்! நாம் இந்த செய்தியின் முதல்பகுதியில் தியானித்த சத்தியத்தில்.... பொறாமை, வெளியரங்கம்! தற்புகழ்ச்சி, வெளியரங்கம்! இறுமாப்பு, வெளியரங்கம்! முரட்டு குணம், வெளியரங்கம்! தன்னையே பிரியப்படுத்தும் குணம், வெளியரங்கம்! கோபம் தூண்டப்பட்டு கொப்பளிப்பது, வெளியரங்கம்! அநியாயம் செய்து சந்தோஷப்படுவது, வெளியரங்கம்! இதுபோன்ற சுயத்தின்*

*தீமைகள் வெளியரங்கமாயிருப்பது "**அன்பிற்கு ஏற்பட்ட தோல்வி! அல்லவா?** இதற்கு மாறாக, இக்கொடிய சுயத்தின் தீமைகள் ஒருவனுடைய வாழ்க்கையில், சிலுவையில் அறையப்பட்டு, அவன் பெற்ற தெய்வ அன்பு, சகலத்தையும் தாங்கும், இந்த நறுமணம் வெளியரங்கம்! சகலத்தையும் விசுவாசிக்கும், இந்த நறுமணம் வெளியரங்கம்! ஒருவர்மேல் ஒருவர் நம்பிக்கை இழக்கும் இக்காலத்தில், சகலத்தையும் நம்பும், இந்த நறுமணம் வெளியரங்கம்! சகலத்தையும் சகித்திடும், கிறிஸ்துவின் இந்த சிலுவை மாண்பு, வெளியரங்கம்! மொத்தத்தில் 'கிறிஸ்துவின் அன்பின் ஒளி' இருளில் பிரகாசிப்பது "அன்பு ஒருநாளும் தோற்றுப் போவதில்லை!" என்ற நிரூபணமாய் இருக்கிறதல்லவா? ஆ, அதுவே நமக்கும், நம் குடும்பத்திற்கும், நம் சபைக்கும் என்றும் நிலைத்திருப்பதாக!*

இயேசு தனக்கு 'சொந்தமானவர்களை' முடிவுபரியந்தம் அன்புகூர்ந்தார்! என்ற யோவான் 13:1-ம் வசனத்தின் கெம்பீரத்தை, சில சபையோர் "நாங்கள்தான் இயேசுவின் சீஷர்கள்" என அழைத்து, தாய்-தந்தை, மனைவி-பிள்ளைகள், சகோதரர்கள், என நம் காலமெல்லாம் 'சொந்தமாயிருப்பவர்களை' அன்பற்ற முறையில் பிரிவினையை கொண்டு வந்துவிட்டு, அதையே "சீஷத்துவம்" என கொண்டாடும் மாந்தர்களை நாம் என்னவென்று சொல்வது? ஒரு சபையின் போதகரே, தன் சொந்த வீட்டிலுள்ள, எல்லோர் மீதும் பகை, பிரிவினை வைத்திருக்கிறார்! அதுபோலவே, அந்த சபையிலிருக்கும் குடும்ப மக்களுக்கு இடையிலும், இந்த அன்பற்ற பிரிவினை துயரம் ஏற்படுத்தி, அதை 'சீஷத்துவம்' என போற்றி, புறஜாதி குடும்பங்களில்கூட காணப்படாத 'அன்பின் தோல்வியை' இதுவே இயேசுவின் ஒப்பற்ற சீஷத்துவம் எனக் கூறுவது, கிறிஸ்துவின் நாமத்திற்கு ஏற்படுத்தும் அபகீர்த்தி அல்லவா?

*தன்னை மறுதலித்த பேதுருவைக் காண, உயிர்த்தெழுந்த இயேசு சென்றபோது "பேதுரு, நீ ஏன் இப்படி என்னை மறுதலித்தாய்?" என்று கேட்காமல் "பேதுரு நீ என்னை அன்புகூருகிறாயா?" என கேட்டதல்லவோ,* **இயேசுவின் அன்பின் ஜெயக்கொடி!** *சீரும் சிறப்புமாய் நின்ற கிறிஸ்துவின் சரீரமான சபைகளில்கூட "சீஷத்துவம்" என்ற பெயரில் பிரிவினையையும், அன்பற்ற வெறுப்பையும் கொட்டுவது "இவர்கள் தெய்வ அன்பிற்கு" கொண்டு வந்த மிகப்பெரிய தோல்வி அல்லவா? கடைசியாக தேவபக்திக்கு மிக முக்கியமான "விசுவாசம், நம்பிக்கை, அன்பு" என மூன்று பகுதிகளைக்கூறி* "**இவைகளில் அன்பே பெரியது!**" *என கெம்பீரிக்கும் 1கொரிந்தியர் 13:13-நமது, நமது குடும்பத்தின், நமது சபையின் ஜெயமாகட்டும்! ஆமென்.*

*- T.ரத்தினகுமார்*

‘மகாராஷ்டிர கிறிஸ்தவ வீரர்!’

# நாராயண வாமன் திலக்



ஒரு மகாராஷ்டிரா பிராமண இந்துக் குடும்பத்தில் பிறந்த இவர் ‘நாராயண கடவுள் பக்தியில்’ வளர்க்கப்பட்டார். மகாராஷ்டிராவில் பிறந்து வளர்ந்த அவர், ஏராளமான புத்தகங்களை வாசிக்கும் பழக்கங்களை கொண்டிருந்தார். குறிப்பாய் ‘ஆன்மீக புத்தகங்களை’ விரும்பி வாசித்தார். இந்து சாஸ்திரம் அனைத்தையும் படித்து கற்றுக்கொண்டார். மனிதனுக்கு நிகழும் உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு, ஆன்மீக அனுபவங்களை கற்று அறிந்தார். அதனிமித்தம், மராத்திய மொழியில் இந்து பக்திப்பாடல்களை எழுதினார். அவரது பாடல் வரிகள் மராத்திய மக்களை கவர்ந்து ‘மராத்திய புலவராக’ புகழ்பெற்றார்.

அதிக தேசப்பற்று உடையவராய் வளர்ந்த அவர், கிறிஸ்தவ மார்க்கத்தை ‘அந்நியரின் மதம்’ எனக்கூறி, சுவிசேஷ புத்தகங்களை கிழித்து எறிந்தார். எதையும் கேள்வி கேட்டு, ஆன்மீக வளர்ச்சிக்கு உகந்ததாய் இல்லாததை புறக்கணித்தார். இச்சமயத்தில்தான், ஒரு ரயில் பயணத்தில் “ஒரு பம்பாய் கிறிஸ்தவ மிஷனெரியை” சந்திக்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. முதலில் அவரை அந்நியராய் பார்த்த திலக், மிஷனெரியின் சம்பாஷணையில் ஆன்மீக ஊக்கங்களும், அவருக்குள் உறைந்து கிடந்த பல கேள்விகளுக்கு விடையும் அவருக்கு கிடைத்தது. பயணத்தின் இறுதியில் அந்த மிஷனெரி கொடுத்த சுவிசேஷ புத்தகம், அவருடைய ஆவிக்குரிய கண்களை பிரகாசிக்கச் செய்துவிட்டது.

அதனிமித்தமாய் கிறிஸ்தவ மார்க்கத்தை தனக்கு சொந்தமாய் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். அவர் ஒரு இந்து உயர் ஜாதியை சேர்ந்தவராய் இருந்தபடியால் பல்வேறு துன்பங்கள் அவருக்கு ஏற்பட்டது. அவருடைய சமுதாயமும் அவருடைய சொந்த குடும்பமும் அவரை புறக்கணித்து அதிகமாய் துன்புறுத்தினார்கள்! அவர் கிறிஸ்துவின் மீது கொண்ட விசுவாசத்தை விட்டு விலகும்படி அதிகமாய் நெருக்கப்பட்டார். ஆனால் திலக் அவர்களோ, இயேசு கிறிஸ்துவை விசுவாசித்த ஜீவியம் மூலமாய், அதிகமான ஆன்மீக பெலனை பெற்றுக்கொண்டதாக கூறினார். அவருடைய மனைவியும் மகனும், திலக் அவர்களை உதறிவிட்டு 4-ஆண்டுகள் பிரிந்து வாழ்ந்தார்கள். 4-வருடங்களுக்குப் பிறகு, திலக் அவர்களின் மகிழ்ச்சியான கிறிஸ்தவ வாழ்க்கையை கண்ட, அவருடைய மனைவி லட்சுமிபாயும், அவர்களுடைய ஒரே மகனும் வீட்டிற்கு திரும்பி வந்து பகிரங்கமாய் ஞானஸ்நானம் எடுத்து, திலக் அவர்களோடு கிறிஸ்தவ விசுவாச வாழ்க்கையை வாழ்ந்தார்கள்!

மிக ஆழமான ஆவிக்குரிய பாடல்களை இயற்றி, மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள எல்லா கிறிஸ்தவ ஆலயங்களிலும் அவர் எழுதிய பாடல்கள் பக்தியுடன் பாடப்பட்டன. சுமார் 250 மராட்டிய பாடல்கள், மனம் மாறிய மராத்திய கிறிஸ்தவர்களை விசுவாசத்தில் பெலப்படுத்தியது. 1919-ம் ஆண்டு மரித்த திலக் அவர்கள் தன் விசுவாசத்தையும், தைரியத்தையும், தன் எழுத்து ஊழியத்தையும் மகாராஷ்டிரா மாநில கிறிஸ்தவர்களுக்கு அர்ப்பணமாய் கொடுத்துச் சென்றுள்ளார். ஒரு இந்து புலவராய் துவங்கி, கிறிஸ்தவ சுவிசேஷகராய் மகாராஷ்டிரா கிறிஸ்தவர்களை நிலை நிற்கச் செய்த அவரது ஊழியம், இன்றும் மங்காமல் பசுமையாயிருக்கிறது!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## சிறு வயதிலேயே தேவ அன்பால் ஈர்க்கப்படுவது பாக்கியம்!

நான் 10-வயது சிறு பையனாக இருந்த நாட்களில் யாரோ ஒருவர் எனக்கு ரூ.20-ஐ அன்பளிப்பாக கொடுத்தார். இவ்வளவு பெரிய தொகையை நான் அதுவரை அன்பளிப்பாக பெற்றதே கிடையாது. எனக்கிருந்த சந்தோஷத்துக்கு அளவில்லை. இந்த இருபது ரூபாயை கொண்டு 6 பெரிய இனிப்பு மிட்டாய்களை வாங்கி விடலாமே என்ற எண்ணம் எனது மனதில் பொங்கி பூரித்து எழுந்தது.

ஆனால் அடுத்த வார ஞாயிறு ஓய்வுநாளிலே தேவனுடைய சுவிசேஷம் அறிவிக்கப்படாத இடங்களுக்குச் சென்று சுவிசேஷம் அறிவிக்கும் மிஷனெரிகளுக்கு ‘ஒரு விசேஷித்த காணிக்கை’ எடுக்கப்படும் என்ற அறிவிப்பு எனக்கு நன்றாகத் தெரியும்.

தேவனுடைய சுவிசேஷ நற்செய்தியை கேட்காத மக்கள் வெகு தொலை தூரமான இடங்களில் இருக்கின்றனர். ஆனால், எனக்குத் தேவையான மிட்டாய் கடையோ 2 மைல்கள் தொலைவில் மாத்திரமே தான் இருக்கின்றது.

என்னால் அன்று தூங்கவே முடியாமற் போய்விட்டது. சுவிசேஷம் கேள்விப்படாத மக்கள் ஒரு பக்கம், எனது இனிப்பான மிட்டாய்கள் மறுபக்கம். ஒரு பக்கம் தெய்வ அன்பு அடுத்த பக்கம் சுயநலம்! இவைகளின் நடுவே கடுமையான போராட்டம் நடந்து கொண்டிருந்தது. இறுதியில் நான், அடுத்த நாள் ஞாயிறு வேதாகம பள்ளி ஆராதனையின் போது எனது அந்த 20- ரூபாயை காணிக்கைத் தட்டில் படைத்து விடுவதென்ற திட்டமான தீர்மானத்தோடு எனது கண்களை மூடி அயர்ந்து நித்திரை செய்தேன்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை, ஊழியத்திற்காக சேகரிக்கப்படும் காணிக்கை தட்டு என்னைக் கடந்து சென்றபோது, நான் எனது 20- ரூபாயை மிகுந்த மகிழ்ச்சியுடன் கர்த்தருக்கு கையளித்தேன். நீங்கள் நம்புவீர்களோ என்னவோ எனக்குத் தெரியாது! நான் அதைப் படைத்ததும் ஒரு கடையிலுள்ள அனைத்து மிட்டாய்களும் எனக்குக் கிடைத்துவிட்டதைப் போன்றதொரு ஆனந்த சந்தோஷம் என் உள்ளத்தை முழுமையாக நிரப்பிற்று. ஆண்டவர் இயேசுவுக்காக இப்படி தெய்வீக தீர்மானம் செய்கின்ற எந்த பையனுக்கும் பெண் பிள்ளைக்கும் எனக்குக் கிடைத்த அந்த பேரானந்த மகிழ்ச்சி நிச்சயமாகக் கிடைக்கும் என்பதில் எந்த ஒரு சந்தேகமுமே கிடையாது!

- சுவிசேஷ மலர்

பணம் அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by:
Madurai Christian Fellowship, Regd Society,
*Editor* T.Rathnakumar, Madurai.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi.